# TNPSC (GR-II) ஒரிஜினல் வினாத்தாள் - 2007

தேர்வு நாள் : 17–11–2007

## பொது அறிவும் பொது தமிழும்

வினாத்தாள் வரிசை **C**

1. **செல்லின் சொரசொரப்பான எண்டோபிளாச வலை அடியிற்கண்டவற்றில் எந்தச் செயலை சிறப்பாக செய்கிறது ?**
   - A) நியூக்ளியோடைடு உருவாக்குதல்
   - B) புரோட்டீன் உருவாக்குதல்
   - C) கொழுப்பு உருவாக்குதல்
   - D) ஸ்டார்ச் உருவாக்குதல்

2. **கிரப்ஸ் சுழற்சி நடைபெறும் இடம்**
   - A) குளோரோபிளாஸ்ட்
   - B) பெராக்ஸிசோம்ஸ்
   - C) மைட்டோகாண்டிரியா
   - D) சைட்டோபிளாசம்

3. **லைசோசோமின் வேறுபெயர்**
   - A) தற்கொலைப் பைகள்
   - B) செல்லின் ஆற்றல் நிலையம்
   - C) காண்டிரியோசோம்
   - D) டிக்டியோசோம்

4. **பால் அணுக்களை உருவாக்கக்கூடிய முறை**
   - A) மைட்டோஸிஸ்
   - B) மியோஸிஸ்
   - C) ஏமைட்டோஸிஸ்
   - D) இவற்றுள் எதுவுமில்லை

5. **குறுக்கு ஏறும் முறை அடியிற்கண்ட எந்த நிலையில் ஏற்படுகிறது ?**
   - A) லெப்டோடீன்  B) சைகோட்டீன்
   - C) பாக்கிட்டீன்  D) டையாகைனஸிஸ்

6. **விலங்குகள் மண்ணிற்குள் புதைந்து வாழும் தகவமைப்பின் பெயர்**
   - A) நிலத்தில் வாழ்வதற்கான தகவமைப்பு
   - B) பாசோரியல் தகவமைப்பு
   - C) நீர்வாழ் தகவமைப்பு
   - D) பறப்பதற்கான தகவமைப்பு

7. **டெசிபல் என்பது இதை அளக்க உதவும் அலகு**
   - A) ஒலியின் அளவு
   - B) கதிர்வீச்சின் அளவு
   - C) ஒளியின் அளவு
   - D) வெப்பத்தின் அளவு

8. **இரத்தத்தில் சர்க்கரையின் அளவு இதனால் அதிகரிக்கப்படுகிறது**
   - A) FSH  B) TSH
   - C) இன்சுலின்  D) குளுக்காஹான்

9. **அக்ரோமெகாலி பின்கண்ட காரணங்களில் ஒன்றினால் ஏற்படுகிறது**
   - A) வளர்ச்சி ஹார்மோன் அதிகம் சுரப்பதால்
   - B) வளர்ச்சி ஹார்மோன் குறைவாகச் சுரப்பதால்
   - C) இன்சுலின் அதிகம் சுரப்பதால்
   - D) குளுக்காஹான் குறைவாகச் சுரப்பதால்

10. **செயலிழந்து சுருங்கும் கார்ப்பஸ் லூட்டியம் இவ்வாறு அழைக்கப்படுகிறது**
    - A) கார்ப்பஸ் லென்டியா
    - B) கார்ப்போரா அல்லேட்டா
    - C) கார்ப்பஸ் டீஜெனரேட்டம்
    - D) கார்ப்பஸ் அல்பிகன்ஸ்

11. **பின்வருபவர்களில் முதன்முதலில் இந்தியப் போர்களில் பீரங்கியைப் பயன்படுத்தியவர்**
    - A) பாபர்
    - B) இப்ராஹிம் லோடி
    - C) ஷெர்ஷா
    - D) அக்பர்

12. **'கதக்' எனும் நடனம் எங்கு முதன்மையான நடனமாகக் கருதப்படுகிறது ?**
    - A) வடஇந்தியா  B) ஒரிஸ்ஸா
    - C) கேரளா  D) கர்நாடகா

13. **பகுப்பு அளவை அனுமானம் செல்லும் முறை**
    - A) தனி உரையிலிருந்து பொது உரை
    - B) தனி உரையிலிருந்து தனி உரை
    - C) பொது உரையிலிருந்து தனி உரை
    - D) பொது உரையிலிருந்து பொது உரை

14. **சரியான விடையைக் காண்க.**
    - A) 'A' உரை நிபந்தனையுள்ள உரை
    - B) 'A' உரை சார்பற்ற உரை
    - C) 'A' உரை சார்புற்ற உரை
    - D) 'A' உரை பிரிநிலை உரை

**15. சைவ சித்தாந்தத்தின்படி ஆன்மாவின் வகைகள்**

A) இரண்டு B) மூன்று
C) நான்கு D) ஐந்து

**16. சரியான விடையைக் காண்க.**

A) 'E' உரையின் மாற்றம் 'E' உரையே
B) 'O' உரையின் மாற்றம் 'A' உரையே
C) 'I' உரையின் மாற்றம் 'O' உரையே
D) 'A' உரையின் மாற்றம் 'E' உரையே

**17. 'தத்துவ தரிசனம்' என்ற சொல்லின் பொருள்**

A) நியாய சக்தி
B) உண்மையான உட்பார்வை
C) உண்மை பக்தி
D) ஒளியின் உட்பார்வை

**18. சரியான விடையைக் காண்க.**

A) கன்னியாகுமரி : விவேகானந்தர்
B) குறிஞ்சி சாலை : ஸ்ரீ அரவிந்தர்
C) ஹனுமான் மந்திர் : காந்திஜி
D) சபர்மதி ஆசிரமம் : ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர்

**19. தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்ந்த மாவட்டம்**

A) தஞ்சாவூர் B) மதுரை
C) சிவகங்கை D) செங்கல்பட்டு

**20. பகவத் கீதையில் உள்ள அதிகாரங்கள்**

A) 12 B) 14
C) 16 D) 18

**21. தமிழ்நாடு அதிக மழைப்பொழிவை பெறக்கூடிய மாதங்கள்**

A) ஜனவரி–மார்ச்
B) ஏப்ரல்–ஜூன்
C) ஜூலை–செப்டம்பர்
D) அக்டோபர்–நவம்பர்

**22. ஆசியாவின் மிக நீண்ட மலைத்தொடர்கள்**

A) குன்லுன் மலைத்தொடர்கள்
B) இமய மலைத்தொடர்கள்
C) இந்துகுஷ் மலைத்தொடர்கள்
D) கின்கன் மலைத்தொடர்கள்

**23. $1^0$ தீர்க்க ரேகையைக் கடக்க பூமி எடுத்துக் கொள்ளும் நேரம்**

A) 5 நிமிடம் B) 24 மணி
C) 4 நிமிடம் D) 2 நிமிடம்

**24. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் சரியாகப் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு:**

| பட்டியல்–I (நதிகள்) | | பட்டியல்–II (உற்பத்தியிடம்) | |
|---|---|---|---|
| a) | கோதாவரி | 1) | இராஜஸ்தான் |
| b) | காவேரி | 2) | மத்தியப்பிரதேசம் |
| c) | தபதி | 3) | மகாராஷ்டிரா |
| d) | சபர்மதி | 4) | கர்நாடகா |

*குறியீடுகள் :*

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 3 | 4 | 2 |
| B) | 3 | 4 | 2 | 1 |
| C) | 4 | 2 | 3 | 1 |
| D) | 2 | 1 | 4 | 3 |

**25. தீபகற்ப இந்தியாவின் மிக நீளமான ஆறு**

A) மகாநதி B) தபதி
C) காவிரி D) கோதாவரி

**26. மணிமுத்தாறு அணைக்கட்டு அமைந்துள்ள மாவட்டம்**

A) திருநெல்வேலி B) கோயம்புத்தூர்
D) கடலூர் D) தஞ்சாவூர்

**27. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் சரியாகப் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு:**

| பட்டியல்–I | | பட்டியல்–II | |
|---|---|---|---|
| a) | நெல் | 1) | பஞ்சாப் |
| b) | கோதுமை | 2) | கர்நாடகம் |
| c) | கேழ்வரகு | 3) | கேரளா |
| d) | காப்பி | 4) | தமிழ்நாடு |

*குறியீடுகள் :*

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 2 | 4 | 1 | 3 |
| B) | 3 | 4 | 1 | 2 |
| C) | 4 | 1 | 2 | 3 |
| D) | 2 | 1 | 4 | 3 |

**28. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் சரியாகப் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு:**

| | பட்டியல்–I | | பட்டியல்–II |
|---|---|---|---|
| a) | நிலநடுக்கம் | 1) | நிலச்சரிவு |
| b) | கடற்கோள் | 2) | போபால் |
| c) | நீலகிரி | 3) | ரிக்டர் அளவு |
| d) | வாயுக்கசிவு | 4) | அலைஅலையாக |

*குறியீடுகள் :*

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 2 | 4 | 1 | 3 |
| B) | 3 | 4 | 1 | 2 |
| C) | 3 | 4 | 2 | 1 |
| D) | 2 | 1 | 4 | 3 |

**29. சதுப்புநிலக் காடுகள் காணப்படுவது**

A) கடற்கரை மற்றும் டெல்டா பகுதிகளில்
B) பீடபூமிகள் மற்றும் பள்ளத்தாக்குகளில்
C) மலைச்சரிவுகள் மற்றும் பள்ளத்தாக்குகள்
D) சமவெளிகள் மற்றும் பீடபூமிகள்

**30. ஆழம் அதிகரிக்க அதிகரிக்க அதிகரிக்கும் வெப்ப வீதம் அழைக்கப்படுவது**

A) சாதாரண லாப்ஸ் வீதம்
B) புவிவெப்ப சரிவளவு
C) தலைகீழ் வெப்ப விகிதம்
D) பூரிதநிலை விகிதம்

**31. எந்தப் பிரிவின் கீழ் நிதி நெருக்கடி பிரகடனப்படுத்தப்படுகிறது ?**

A) விதி–356 B) விதி–360
C) விதி–352 D) விதி–350

**32. கீழே குறிப்பிட்டுள்ளவற்றின் எந்தப் பட்டியலின் மேல் மத்திய மற்றும் மாநில அரசுகள் சட்டமியற்றலாம் ?**

A) மாநிலப் பட்டியல்
B) மத்தியப் பட்டியல்
C) பொதுப் பட்டியல்
D) இவை அனைத்தும்

**33. ஜம்மு–காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்ற கருத்து வலுப்பெற்றது**

A) ஜம்மு–காஷ்மீர் குடியிருப்பு மசோதா 1982–ல் நிறைவேற்றப்பட்ட பிறகு
B) லால்பகதூர் சாஸ்திரி இறந்த பிறகு
C) சுவரன்சிங்கின் ராஜினாமாவிற்குப் பிறகு
D) பாகிஸ்தானிலிருந்து தீவிரவாதிகளின் ஊடுருவலுக்குப் பிறகு

**34. அரசாங்கத்தில் பங்குபெற முயற்சிக்காமலே அரசின் முடிவுகளை மாற்ற முயற்சிக்கும் அமைப்பு**

A) தன்னார்வ தொண்டு அமைப்புகள்
B) அழுத்தக் குழுக்கள்
C) அரசாங்கம் சாரா அமைப்புகள்
D) அரசியல் கட்சிகள்

**35. தமிழ்நாட்டில் அ.இ.அ.தி.மு.க. முதன்முதலில் ஆட்சிக்கு வந்த ஆண்டு**

A) 1972 B) 1977
C) 1982 D) 1984

**36. இந்திய ரிசர்வ் வங்கியின் நாளிதழ் எவ்வளவு நாளுக்கு ஒருமுறை வெளியிடப்படும் ?**

A) இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை
B) மாதம்தோறும்
C) ஆறு மாதங்களுக்கு ஒருமுறை
D) ஆண்டுதோறும்

**37. கீழே குறிப்பிட்டுள்ளவைகளில் சரியாகப் பொருந்தாமல் உள்ளது எது / எவைகள் ?**

| | | | |
|---|---|---|---|
| I. | முதலாவது திட்டம் | – | 1950–55 |
| II. | மூன்றாவது திட்டம் | – | 1961–66 |
| III. | நான்காவது திட்டம் | – | 1966–77 |
| IV. | ஏழாவது திட்டம் | – | 1985–90 |

A) I மற்றும் II B) III மட்டும்
C) I மட்டும் D) I மற்றும் III

**38. இந்திய பொருளாதார திட்டமிடுதலில் சேர்க்கப்படாத நோக்கம் யாது ?**

A) தன்னிறைவு
B) தொழில்துறை வளர்ச்சி
C) வேலைவாய்ப்பு உருவாக்குதல்
D) மக்கள்தொகை வளர்ச்சி

**39. மக்கள்தொகை பெருக்கத்தின் விளைவு குறித்து எச்சரிக்கை விடுத்த பொருளாதார நிபுணர் யார் ?**

A) ஆல்பிரட் மார்ஷல்
B) கார்ல் மார்க்ஸ்
C) மால்தஸ்
D) ராஸ்டவ்

**40. ‘காட்’ (GATT) என்ற அமைப்பு எப்போது துவங்கப்பட்டது ?**

A) 1947 B) 1948
C) 1950 D) 1956

**41.** **'மதுரா விஜயம்' என்ற நூலின் ஆசிரியர்**

A) கங்காதேவி
B) காரைக்கால் அம்மையார்
C) பரஞ்சோதி
D) மாங்குடி மருதனார்

**42.** **இரண்டு மதத்தினைச் சார்ந்த ஆண், பெண் இருவரும் கீழ்க்கண்ட சட்டப்படி திருமணம் செய்து கொள்ளலாம்**

A) இந்து திருமணச்சட்டம்
B) சிறப்புத் திருமணச் சட்டம்
C) கிறிஸ்துவ திருமணச் சட்டம்
D) முகமதிய திருமணச் சட்டம்

**43.** **கீழ்க்கண்டவற்றில் ஒன்று முதல்நிலைக் குழு ஆகும்.**

A) குடும்பம் B) சமுதாயம்
C) சாதி D) சமூகம்

**44.** **மன்னர் திருமலை நாயக்கரின் தலைநகர்**

A) உறையூர் B) மதுரை
C) தஞ்சாவூர் D) பூம்புகார்

**45.** **பல்லவ மன்னர்களில் 'சித்திரகாரப் புலி' என்ற அடைமொழி பெற்றவர்**

A) மகேந்திரவர்மன் B) இராஜசிம்மன்
C) மாமல்லன் D) நந்திவர்மன்

**46.** **கூட்டாட்சியின் மிகமுக்கிய அம்சம்**

A) ஒரே சட்டமன்றம்
B) அதிகாரப் பங்கீடு
C) நீதி மறுஆய்வு
D) அதிகாரப் பிரிவினை

**47.** **இந்திய குடிமக்களுக்கு அடிப்படை உரிமைகள் வழங்கியதன் முக்கிய நோக்கம்**

A) ஜனநாயக அரசாங்கத்தை ஏற்படுத்த
B) தனிநபர் சுதந்திரத்தைப் பாதுகாக்க
C) நீதித்துறையின் தனித்தன்மையை பாதுகாக்க
D) பொதுவுடமை சமுதாயத்தை உண்டாக்க

**48.** **ஜனாதிபதி பதவிக்காக தேர்தலை நடத்துபவர்**

A) மக்களவை சபாநாயகர்
B) பாராளுமன்றத்தின் பொதுச் செயலர்
C) இந்திய தலைமை நீதிபதி
D) இந்திய தேர்தல் ஆணையம்

**49.** **மாநிலங்களுக்கு ராஜ்ய சபையில் எதன் அடிப்படையில் இடம் ஒதுக்கப்படுகிறது ?**

A) சமமான பிரதிநிதித்துவம்
B) மக்கள்தொகையின் அடிப்படையில்
C) மக்கள்தொகை மற்றும் பொருளாதார நிலை
D) தற்போதைய பொருளாதார நிலையைப் பொறுத்து

**50.** **முதல் அரசியல் அமைப்புச் சட்ட திருத்தம் நடந்த ஆண்டு**

A) 1950 B) 1951
C) 1952 D) 1953

**51.** **5 மாம்பழம் மற்றும் 4 ஆரஞ்சுப்பழம் ஆகியவற்றின் விலையும், 3 மாம்பழம் மற்றும் 7 ஆரஞ்சுப்பழம் ஆகியவற்றின் விலையும் ஒன்றெனில், ஒரு மாம்பழம் மற்றும் ஒரு ஆரஞ்சுப்பழம் ஆகியவற்றின் விலைகளின் விகிதம் என்ன ?**

A) 4 : 3 B) 1 : 3
C) 3 : 2 D) 5 : 2

**52.** $(x + y) : (x - y) = 4 : 1$ **எனில்**
$(x^2 + y^2) : (x^2 - y^2) =$

A) 25 : 9 B) 16 : 1
C) 8 : 17 D) 17 : 8

**53.** $\left(\frac{\sqrt{7} + \sqrt{5}}{\sqrt{7} - \sqrt{5}}\right)$ **– ன் மதிப்பு**

A) $6 + \sqrt{35}$ B) $6 - \sqrt{35}$
C) 2 D) 1

**54.** **கீழ்க்கண்டவற்றுள் மாறுபட்ட எண்ணைக் கண்டுபிடிக்கவும் :**
5, 7, 9, 17, 23, 37

A) 5 B) 9
C) 37 D) 23

**55.** **3 மணிநேரம் ஒரு புகைவண்டி பயணம் செய்கிறது. முதல் மணியில் 10 கி.மீ./மணி என்றும், மீதமுள்ள 2 மணியில் 25 கி.மீ./மணி என்றும் பயணிக்கிறது. இதன் சராசரி வேகம் என்ன ?**

A) 10 கி.மீ./மணி B) 15 கி.மீ./மணி
C) 20 கி.மீ./மணி D) 25 கி.மீ./மணி

**56.** **ஒரு கொடுக்கப்பட்டுள்ள புள்ளிவிவரத்தை, எந்த மூன்று புள்ளிகள் நான்கு சமபகுதிகளாக பிரிக்கிறதோ அவைகள் இவ்வாறு அழைக்கப்படுகிறது.**

A) சராசரிகள் B) கால்மானங்கள்
C) பத்துமானங்கள் D) நூற்றுமானங்கள்

**57. பின்வருவனவற்றுள் எந்தவொன்று குடும்ப வரவு–செலவு மீது உள்ள புள்ளிவிவரத்தை முன்நிறுத்த மிக பொருத்தமானது?**

A) பட்டை விளக்கப்படம்
B) பல்லடுக்கு பட்டை விளக்கப்படம்
C) விழுக்காடு பட்டை விளக்கப்படம்
D) வட்ட விளக்கப்படம்

**58.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| x : | 2 | 4 | 5 | 8 | 10 | 13 |
| f : | 5 | 7 | 10 | 15 | 3 | 2 |

**என்றால் X–ன் முகடு மதிப்பை காண்க.**

A) 5 B) 8
C) 10 D) 13

**59. DBMS என்பதன் விரிவாக்கம் என்ன?**

A) Data Base Medical Science
B) Data Base Management System
C) Data Base Monitoring System
D) இவற்றுள் எதுவுமில்லை

**60. LCD என்பதன் விரிவாக்கம் என்ன?**

A) Liquid Crystal Display
B) Light Controlled Decoder
C) Lack of Control of Digits
D) இவற்றுள் எதுவுமில்லை

**61. சமதள ஆடி ஒன்றை நோக்கி ஒரு மனிதன் 1 மீ/வினாடி வேகத்துடன் நகரும் போது, நகரும் மனிதனின் பிம்பம் அவனை நோக்கி வரும் சார்பு திசைவேகம்**

A) 0.5 மீ/வினாடி B) 1 மீ/வினாடி
C) 2 மீ/வினாடி D) 3 மீ/வினாடி

**62. கீழ்க்கண்ட எந்த உலோகம் மின்காந்தத்தை உருவாக்க மிகவும் சிறந்தது?**

A) தாமிரம் B) டங்ஸ்டன்
C) தேனிரும்பு D) எஃகு

**63. மின் விளக்கினுள் பயன்படும் இழை செய்யப்பட்ட உலோகம்**

A) தாமிரம் B) இரும்பு
C) காரீயம் D) டங்ஸ்டன்

**64. அணுக்கரு ஒன்றினுள் இருப்பது**

A) புரோட்டான்கள் மற்றும் நியூட்ரான்கள்
B) புரோட்டான்கள் மற்றும் எலெக்ட்ரான்கள்
C) நியூட்ரான்கள் மற்றும் எலெக்ட்ரான்கள்
D) நியூட்ரான்கள் மட்டும்.

**65. கீழ்க்கண்டவற்றுள் வெற்றிடத்தில் விரைவாக விழுவது எது?**

A) மரப்பந்து
B) பறவை இறகு
C) எஃகு பந்து
D) மேற்கண்ட அனைத்தும் ஒரே வேகத்தில் விழும், ஏனெனில் வெற்றிடத்தில் காற்றினால் ஏற்படும் தடை இல்லை.

**66. மிக அமிலத்தன்மை உள்ள சேர்மம்**

A) மீத்தேன்
B) மெத்தில் ஆல்கஹால்
C) எத்தில் ஆல்கஹால்
D) பீனால்

**67. கீழ்க்கண்ட வாக்கியங்களில் குறியீடுகளைப் பயன்படுத்தி சரியான விடையைத் தேர்வு செய்:**

கோட்பாடு (A) : பேக்கலைட் ஒரு இறுகிய பிளாஸ்டிக் ஆகும்.

காரணம் (R) : இறுகிய பிளாஸ்டிக்குகள் வெப்பப்படுத்தும் போது இறுகிய நிலையை அடைந்து விடுகின்றன.

**கீழ்க்காணும் குறியீடுகள் மூலம் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க:**

A) (A) மற்றும் (R) இரண்டும் சரியானவை மற்றும் (R) என்பது (A)–ன் சரியான விளக்கம்
B) (A) மற்றும் (R) இரண்டும் சரியானவை ஆனால் (R) என்பது (A)–ன் சரியான விளக்கம் அல்ல
C) (A) சரி; ஆனால் (R) தவறு
D) (A) தவறு; ஆனால் (R) சரி

**68. வைரமும், கிராஃபைட்டும்**

A) ஐசோமர்கள்
B) ஐஸோடோப்புகள்
C) புறவேற்றுமைப் படிவங்கள்
D) பல்படிகள்

**69. ஊக்கப்படுத்தப்பட்ட கரியானது அசுத்த கரைசல்களில் உள்ள நிறமிப் பொருட்களை நீக்குவதற்கு பயன்படுகிறது. அவ்வாறு செயல்படுவதற்குக் காரணம்**

A) ஆக்ஸிகரணம்
B) ஒடுக்கவினை
C) மேற்பரப்பில் உறிஞ்சுதல்
D) சாயம் வெளுத்தல்

**70. போர்டோ கலவை என்பது**

A) காப்பர் சல்பேட் மற்றும் சுண்ணாம்பு
B) சலவைத்தூள் மற்றும் DDT
C) DDT மற்றும் BHC
D) DDT மற்றும் பாராதையான்

**71. 'இந்து' என்னும் ஆங்கில நாளிதழைத் தோற்றுவித்தவர்**

A) ஜி. சுப்பிரமணிய ஐயர்
B) ரா. வேங்கட ராஜுலு
C) ஜெகன்னாத் ஆச்சாரியார்
D) இராஜகோபாலாச்சாரி

**72. அக்னி–I ஏவுகணையின் பாயும் தூரம் எவ்வளவு ?**

A) 700 கி.மீ. B) 1000 கி.மீ.
C) 1600 கி.மீ. D) 2500 கி.மீ.

**73. 2004–ஆம் ஆண்டு எந்த நகரத்தில், ஒரு தொடக்கப்பள்ளியில் ஏற்பட்ட தீயால் 100–க்கும் மேற்பட்ட மாணவர்கள் கொல்லப்பட்டனர் ?**

A) திருச்சி B) கும்பகோணம்
C) கடலூர் D) சேலம்

**74. ஜீவானந்தம் 'ஜனசக்தி' என்ற இதழை எந்த ஆண்டு தொடங்கினார் ?**

A) 1917 B) 1927
C) 1937 D) 1947

**75. 2006–ம் ஆண்டு நடைபெற்ற தமிழக சட்டமன்ற பொதுத்தேர்தலில், பின்வருவனவற்றில் எந்தவொன்று அங்கீகாரம் பெறாத அரசியல் கட்சியாக போட்டியிட்டது ?**

A) தே.மு.தி.க. B) பா.ம.க.
C) ம.தி.மு.க. D) டி.பி.ஐ.

**76. ஆசிரியர் தினம் கொண்டாடப்படும் நாள்**

A) நவம்பர் 14 B) செப்டம்பர் 14
C) செப்டம்பர் 5 D) மே 1

**77. எட்டாவது உலகத் தமிழ் மாநாடு நடத்தப்பட்ட இடம்**

A) மலேசியா B) சென்னை
C) மதுரை D) தஞ்சாவூர்

**78. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் சரியாகப் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு:**

| பட்டியல்–I | பட்டியல்–II |
|---|---|
| a) அண்ணா விருது | 1) சிறந்த பாடலாசிரியருக்கு |
| b) எம்.ஜி.ஆர். விருது | 2) சிறந்த நடிகருக்கு |
| c) கலைவாணர் விருது | 3) சிறந்த வசனகர்த்தாவுக்கு |
| d) கவிஞர் கண்ணதாசன் விருது | 4) சிறந்த நகைச்சுவை நடிகருக்கு |

*குறியீடுகள் :*

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 1 | 2 |
| B) | 1 | 4 | 2 | 3 |
| C) | 2 | 1 | 3 | 4 |
| D) | 3 | 2 | 4 | 1 |

**79. 'கறுப்பு மலர்கள்' என்ற புதுக்கவிதை நூலின் ஆசிரியர்**

A) மீரா B) நா. காமராசன்
C) தமிழன்பன் D) மு. மேத்தா

**80. 'நீதிதேவன் மயக்கம்' என்ற நாடகத்தின் ஆசிரியர்**

A) அண்ணாதுரை B) கே.எஸ். மனோகர்
C) எஸ்.டி. சுந்தரம் D) டி.கே. மூர்த்தி

**81. இந்தியாவின் தோட்டக்கலை ஆராய்ச்சி மையம் உள்ள இடம்**

A) சென்னை B) மும்பை
C) ஹைதராபாத் D) பெங்களூர்

**82. தமிழகத்தில் பெட்ரோலியம் பெருவாரியாகக் கிடைக்கும் மாவட்டம்**

A) தஞ்சாவூர் B) புதுக்கோட்டை
C) திருவாரூர் D) நாகப்பட்டினம்

**83. அறை ஒன்றிலுள்ள இயங்கும் குளிர்சாதனப் பெட்டியின் கதவைத் திறந்தே வைத்துள்ளபோது**

A) அறை சிறிதளவு குளிர்ச்சியடையும்
B) அறை மிகுந்த அளவு குளிர்ச்சியடையும்
C) அறை சிறிதளவு வெப்பமடையும்
D) அறை குளிர்ச்சியோ, வெப்பமோ அடையாது.

**84. தேசிய மாசு தடுப்பு தினம் கடைபிடிக்கப்படும் நாள்**

A) ஜூன் 5 ஆம் தேதி
B) அக்டோபர் 3 ஆம் தேதி
C) ஆகஸ்ட் 20 ஆம் தேதி
D) டிசம்பர் 2 ஆம் தேதி

**85. 1980 ஆம் ஆண்டில் தந்தையின் வயது தன் மகனின் வயதைப் போல் 8 மடங்காகும். 1988 ஆம் ஆண்டில் தந்தையின் வயது 1980 ஆம் ஆண்டில் மகனின் வயது எவ்வளவோ அதைப்போல 10 மடங்காகும் எனில், 1990 ஆம் ஆண்டில் மகன், தந்தை ஆகியோரின் வயது முறையே**

A) 16, 58 ஆண்டுகள்
B) 15, 50 ஆண்டுகள்
C) 14, 42 ஆண்டுகள்
D) 13, 34 ஆண்டுகள்

**86. கீழ்க்கண்டவர்களில், 2002–ஆம் ஆண்டின் சமாதானத்துக்கான நோபல் பரிசைப் பெற்றவர்**

A) கோஃபி அனான் B) ஜார்ஜ் புஷ்
C) ஜிம்மி கார்ட்டர் D) டோனி பிளேர்

**87. மனித வளர்ச்சிக் குறியீடு எந்த ஆண்டில் ஐக்கிய நாடுகளால் உருவாக்கப்பட்டது ?**

A) 1990 B) 1991
C) 1996 D) 1994

**88. 2002–ஆம் ஆண்டின் போது உலக மக்கட்தொகை என்ன ?**

A) 6215 மில்லியன் B) 6211 மில்லியன்
C) 6214 மில்லியன் D) 6210 மில்லியன்

**89. எந்த நாடு சமீபத்தில் உணவு மற்றும் வேளாண்மை நிறுவனத்துடன் (FAO) இணைந்துகொண்டுள்ளது ?**

A) ஜெர்மனி B) வடகொரியா
C) ரஷ்யா D) ஃபிரான்ஸ்

**90. 2004–2005ம் ஆண்டிற்கான பஞ்சாயத்துராஜ் முறையை நடைமுறைப்படுத்துவதில் சிறந்த முதல் மாநிலம் எதுவென்று மத்திய பஞ்சாயத்துராஜ் அமைச்சகத்தால் அறிவிக்கப்பட்டது ?**

A) கேரளா B) தமிழ்நாடு
C) கர்நாடகா D) மத்தியப் பிரதேசம்

**91. இந்தியாவில் முதல் ரப்பர் தோட்டம் எங்கு அமைக்கப்பட்டது ?**

A) தமிழ்நாடு B) கோவா
C) கேரளா D) கர்நாடகா

**92. பாரத ஸ்டேட் வங்கியின் பழைய பெயர் யாது ?**

A) இந்திய வங்கி
B) பிரிட்டிஷ் வங்கி
C) இம்பீரியல் வங்கி
D) இவற்றில் எதுவுமில்லை

**93. இந்தியாவில் பருத்தி துணி உற்பத்தி செய்யும் ஆலைகள் அதிகமாக உள்ள மாநிலம் எது ?**

A) குஜராத் B) மேற்கு வங்காளம்
C) மகாராஷ்டிரம் D) தமிழ்நாடு

**94. 1969 ஜூலை மாதத்தில் நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளின் எண்ணிக்கை**

A) 15 B) 13
C) 11 D) 14

**95. இந்தியாவிலுள்ள மிகவும் முக்கியமான சிறுதொழில் எது ?**

A) துணிமணிகள் B) சணல்
C) நகைகள் D) கைத்தறி

**96. ஆதிமனிதன் முதலில் தெரிந்து கொண்டது**

A) நெருப்பை உண்டாக்குவதற்கு
B) மிருகங்களை அடக்குவதற்கு
C) சக்கரம் செய்வதற்கு
D) தானியம் விளைவிக்க

**97. ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனின் வம்சப் பெயர்**

A) பல்லவ வம்சம் B) சோழ வம்சம்
C) பாண்டிய வம்சம் D) சேர வம்சம்

**98. தமிழகத்தில் பல்லவர் காலத்தில் குறிப்பாக கீழ்க்கண்ட மன்னர் காலத்தில் சாதிமுறை தீவிரமாகப் பின்பற்றப்பட்டது.**

A) விஷ்ணு கோபா
B) முதலாம் மகேந்திரவர்மன்
C) முதலாம் நந்திவர்மன்
D) இரண்டாம் நந்திவர்மன்

**99. பின்வருபவர்களுள் "வைக்கம் வீரர்" என்று அழைக்கப்படுபவர் யார் ?**

A) காமராஜ் B) பெரியார்
C) ராஜாஜி D) சத்தியமூர்த்தி

**100. இந்திய தேசத்தின் மூவர்ணக் கொடியை தயாரித்தவர்**

A) காந்திஜி B) மோதிலால் நேரு
C) சரோஜினி நாயுடு D) அன்னிபெசன்ட்

**101. "நனி புகழ்" – இலக்கணக்குறிப்பு தருக.**

A) தொழிற்பெயர்
B) உருவகம்
C) உரிச்சொல் தொடர்
D) அடுக்குத்தொடர்

**102. "தஞ்சை" – இலக்கணக்குறிப்பு தருக.**

A) இடைப்போலி
B) மரூஉ
C) மெலித்தல் விகாரம்
D) உருவகம்

**103. "இரவும் பகலும்" – இலக்கணக்குறிப்பு தருக.**

A) எண்ணும்மை
B) உவமைத்தொகை
C) வினைத்தொகை
D) பண்புத்தொகை

**104. "கல்வி இல்லாத பெண் களர் நிலம் போன்றவள்" – விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க.**

A) கல்வி இல்லாத பெண் எதைப் போன்றவள் ?
B) கல்வி இல்லாத பெண் களர் நிலம் போன்றவளா ?
C) எது இல்லாத பெண் களர் நிலம் போன்றவள் ?
D) கல்வி இல்லாத பெண் எதற்கு ஒப்பாகும் ?

**105. "அறிஞர் அண்ணா மாற்றாரை மதிக்கும் உயரிய பண்பினர்" – விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க.**

A) மாற்றாரை மதிப்பது எத்தகைய பண்பு ?
B) அறிஞர் அண்ணா எத்தகைய பண்பினர் ?
C) அறிஞர் அண்ணா மாற்றாரை மதிக்கும் உயரிய பண்பினரா ?
D) அறிஞர் அண்ணா எவ்வாறு மதிப்பார் ?

**106. "மாசற்ற மனங்கொண்டவர் இல்லறம் நல்லறமாகும்" – விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க.**

A) மாசற்ற மனங்கொண்டவர் எங்கு நல்லறமாவர் ?
A) எதற்காக இல்லறம் நல்லறமாகும் ?
C) எவர் இல்லறம் நல்லறமாகும் ?
D) மாசற்ற மனங்கொண்டவர் இல்லறம் நல்லறமாகுமா ?

**107. ஒலி வேறுபாடறிந்து பொருத்துக.**

| | ***மரை*** | – ***மறை*** |
|---|---|---|
| A) | திருகு | – குறைத்தல் |
| B) | ஒளித்தல் | – விழுதல் |
| C) | வரையாடு | – மறையவன் |
| D) | தாமரை | – வேதம் |

**108. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளை அறிக.**

| | ***தரித்தல்*** | – ***தறித்தல்*** |
|---|---|---|
| A) | அணிதல் | – வெட்டுதல் |
| B) | ஏழ்மை அடைதல் | – தறி ஓட்டுதல் |
| C) | வேடம் | – கட்டுத்தறி |
| D) | சூழ்ச்சி | – வேறுபடல் |

**109. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க.**

| | ***கழகம்*** | – ***கலகம்*** |
|---|---|---|
| A) | கட்சி அலுவலகம் | – கலக்கமடைதல் |
| B) | உறுதி | – அதிர்ச்சி |
| C) | அறிஞர் அவை | – ஒழிதல் |
| D) | கூட்டமைப்பு | – சண்டை உருவாதல் |

**110. "கா" – உரிய பொருள் தரும் சொல்லைத் தேர்வு செய்க.**

**ஹ)** காப்பு **க்ஷ)** காவல்
**ஊ)** சோலை **னு)** காது

**111. "உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே" – இவ்வடி எந்நூலில் வந்துள்ளது ?**

A) சிலப்பதிகாரம் B) திருக்குறள்
C) மணிமேகலை D) திருப்புகழ்

**112. "தெங்கம்பழம்" – பிரித்து எழுதுக.**

A) தெங்கு + அம் + பழம்
B) தெங்கம் + பழம்
C) தெ + கம் + பழம் D) தெங் + கம்பழம்

**113. "வீற்றிருக்கை" – பிரித்தெழுதுக.**

A) வீ + இருக்கை B) வீ + இரு + கை
C) வீற்றிரு + கை D) வீற்று + இருக்கை

**114. "திருவினையாக்கும்" – பிரித்தெழுதுக.**

A) திருவின் + ஐய + கும்
B) திரு + வினையாக்கும்
C) திருவினை + ஆக்கும்
D) திருவின் + ஐயாக்கும்

**115. புதுமை + எழுச்சி – சேர்த்தெழுதுக.**

A) புது எழுச்சி B) புத்தெழுச்சி
C) புதிய எழுச்சி D) புதும் எழுச்சி

**116. நன்மை + கருத்து – சேர்த்தெழுதுக.**

A) நன்கருத்து B) நல்ல கருத்து
C) நற்கருத்து D) நவின் கருத்து

**117. "அளித்தல்" – எதிர்ச்சொல் தருக.**

A) உருவாக்கல் B) பெறுதல்
D) கொடுத்தல் D) இருத்தல்

**118. "வறுமை" – எதிர்ச்சொல் தருக.**

A) சிறுமை B) பொறுமை
C) பெருமை D) வளமை

**119. "வழுத்தல்" – எதிர்ச்சொல் தருக.**

A) வழு கூறல் B) புகழ்தல்
C) இகழ்தல் D) பகர்தல்

**120. "மலர்தல்" – எதிர்ச்சொல் தருக.**

A) குவிதல் B) குளிர்தல்
C) மலர்தரல் D) விரிதல்

**121. உழவன் உழைத்து, களைத்து வீடு திரும்பினார் – எவ்வகை வாக்கியம்?**

A) தனிவாக்கியம் B) கலவை வாக்கியம்
C) தொடர் வாக்கியம்
D) உணர்ச்சி வாக்கியம்

**122. குழந்தைகளின் மனம் மலரினும் மென்மையானது; புனிதமானது; பொய் பேசாத் தன்மையானது. – எவ்வகை வாக்கியம்?**

A) தனிவாக்கியம்
B) கலவை வாக்கியம்
C) தொடர் வாக்கியம்
D) எதிர்மறை வாக்கியம்

**123. "கொடியது, கொடியது மணமுடிக்க; பணம் கேட்பது!" – எவ்வகை வாக்கியம்?**

A) செய்தி வாக்கியம்
B) வினா வாக்கியம்
C) கட்டளை வாக்கியம்
D) உணர்ச்சி வாக்கியம்

**124. பிறமொழிச் சொல்லில்லாத் தொடரைத் தேர்க.**

A) ஸ்டேஷனரி ஷாப்பில் புத்தகம் வாங்கினேன்
B) எழுதுபொருள் அங்காடியில் புத்தகம் வாங்கினேன்
C) எழுதுபொருள் அங்காடியில் புஸ்தகம் வாங்கினேன்
D) ஸ்டேஷனரி அங்காடியில் புஸ்தகம் வாங்கினேன்

**125. பிறமொழி சொல்லில்லாத் தொடர் தேர்க.**

A) சுபதினத்தில் பெரியோர்க்கு நமஸ்காரம் செய்க
B) சுபதினத்தில் பெரியோர்க்கு வணக்கம் செய்க
C) நன்னாளில் பெரியோர்க்கு கும்பிடுதல் செய்க
D) நன்னாளில் பெரியோர்க்கு நமஸ்காரம் செய்க

**126. "உலகநாதன் ஓட்டலுக்குச் சென்று நாஷ்டா சாப்பிட்டான்" – பிறமொழி நீங்கிய தொடர் எது?**

A) உலகநாதன் உணவு விடுதிக்குச் சென்று சிற்றுண்டி சாப்பிட்டான்
B) உலகநாதன் உணவு விடுதிக்குச் சென்று நாஷ்டா சாப்பிட்டான்
C) உலகநாதன் ஓட்டலுக்குச் சென்று சிற்றுண்டி சாப்பிட்டான்
D) உலகநாதன் ஓட்டலுக்குச் சென்று நாஷ்டா சாப்பிட்டான்

**127. "பிரசங்கம்" – இச்சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல் தருக.**

A) பிரச்சாரம் B) சொற்பொழிவு
C) தொடர்பேச்சு D) மதப்பிரசங்கம்

**128. "தாசில்தார்" – சரியான தமிழ்ச்சொல் தருக.**

A) துறை அதிகாரி
B) வருவாய் அலுவலர்
C) மாவட்ட கலெக்டர்
D) வட்ட ஆட்சியர்

**129. "மராமத்து இலாக்கா" – சரியான தமிழ்ச்சொல் தருக.**

A) மக்கள் நலவாழ்வுத் துறை
B) பொதுப்பணித் துறை
C) நெடுஞ்சாலைத்துறை
D) மருத்துவத் துறை

**130. "கவர்னர்" – இச்சொல்லுக்குத் தமிழ்ச்சொல் தருக.**

A) கவருபவர்
B) முதலமைச்சர்
C) ஆளுநர்
D) ஆட்சியர்

**131. சந்திப்பிழைகளை நீக்குக.**

A) முதுமையில் வேலைகளை குறைத்துக் கொள்ள வேண்டும்

B) முதுமையில் வேலைகளைக் குறைத்து கொள்ள வேண்டும்

C) முதுமையில் வேலைகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும்

D) முதுமையில் வேலைகளை குறைத்து கொள்ள வேண்டும்

**132. சந்திப்பிழைகளை நீக்குக.**

A) தொழிற்க்கல்வியும் தனித்தமிழ் வழியில் நடத்திட இயலும்

B) தொழிற்கல்வியும் தனித்தமிழ் வழியில் நடத்திட இயலும்

C) தொழிற்க்கல்வியும் தனிதமிழ் வழியில் நடத்திட இயலும்

D) தொழிற்கல்வியும் தனிதமிழ் வழியில் நடத்திட இயலும்

**133. ஒருமை, பன்மை பிழைகளை நீக்குக.**

A) ஆங்கிலப் படிப்பில் நமக்கு மோகம் இருக்கிறது

B) ஆங்கிலப் படிப்பில் நமக்கு மோகம் இருக்கின்றன

C) ஆங்கிலப் படிப்பில் நமக்கு மோகம் இருக்கும்

D) ஆங்கிலப் படிப்பில் நமக்கு மோகம் இருப்பது

**134. ஒருமை, பன்மை பிழைகளை நீக்குக.**

A) திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால் பிரிவுகளை உடையது

B) திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால் பிரிவுகளை உடையன

C) திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால் பிரிவுகளை உடைகின்றது

D) திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்னும் பிரிவு உடையது

**135. வழூஉச் சொற்களை நீக்குக.**

A) என் வீட்டுக்கு அருகாமையில் கோயில் உள்ளது

B) எனது வீட்டுக்கு அருகில் கோயில் உள்ளது

C) என் வீட்டுக்கு அருகில் கோயில் உள்ளது

D) எனது வீட்டுக்கு அருகாமையில் கோயில் உள்ளது

**136. வழூஉச் சொற்களை நீக்கி எழுதுக.**

A) எனக்கு அஞ்சு காணி புஞ்சை நிலம் உள்ளது

B) எனக்கு ஐந்து காணி புஞ்சை நிலம் உள்ளது

C) எனக்கு ஐந்து காணி புன்செய் நிலம் உள்ளது

D) எனக்கு அஞ்சு காணி புன்செய் நிலம் உள்ளது

**137. வழூஉச் சொற்களை நீக்கி எழுதுக.**

A) கூட்டத்தில் பல அறிஞர்கள் பேசினர்

B) கூட்டத்தில் பல அறிஞர் பேசினர்

C) கூட்டத்தில் அறிஞர்கள் பலர் பேசினர்

D) கூட்டத்தில் அறிஞர் பலர் பேசினர்

**138. சரியான சொற்றொடர் தேர்க.**

A) விளக்கை ஏற்று

B) விளக்கை கொழுத்து

C) விளக்கைப் பற்றவை

D) விளக்கை எரி

**139. சரியான சொல்லைத் தேர்ந்தெடுக்க.**

A) பால் உண் B) பால் சாப்பிடு

C) பால் பருகு D) பால் குடி

**140. சரியான சொல்லைத் தேர்ந்தெடுக்க.**

A) வானம்பாடி பாடும்

B) வானம்பாடி கூவும்

C) வானம்பாடி கத்தும்

D) வானம்பாடி கொஞ்சும்

**141. பொருந்தாச் சொல்லைத் தேர்ந்தெடுக்க.**

A) காலை B) காளை

C) மாலை D) நண்பகல்

**142. பொருந்தாச் சொல்லைத் தேர்வு செய்க.**

A) பாணன், பாடினி B) ஆயர், ஆய்ச்சி

C) குறவர், குறத்தி D) பரதர், உழத்தி

**143. பொருந்தாச் சொல்லைத் தேர்வு செய்க.**

A) பரணி B) உலா

C) கோவை D) பழமொழி

**144. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் சரியாகப் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு:**

| பட்டியல்–I | பட்டியல்–II |
|---|---|
| 1) பம்மல் சம்பந்த முதலியார் | அ) இலங்கேஸ்வரன் |
| 2) தி.க. சண்முகம் | ஆ) சந்திரோதயம் |
| 3) அறிஞர் அண்ணா | இ) மனோகரா |
| 4) மனோகரன் | ஈ) இராஜராஜ சோழன் |

*குறியீடுகள் :*

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | அ | ஆ | இ | ஈ |
| B) | ஆ | இ | ஈ | அ |
| C) | இ | ஈ | ஆ | அ |
| D) | ஈ | அ | ஆ | இ |

**145. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் சரியாகப் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு:**

| பட்டியல்–I | பட்டியல்–II |
|---|---|
| **1)** கல்கி | **அ)** குறிஞ்சி மலர் |
| **2)** சாண்டில்யன் | **ஆ)** பாவை விளக்கு |
| **3)** நா. பார்த்தசாரதி | **இ)** சிவகாமியின் சபதம் |
| **4)** அகிலன் | **ஈ)** கடல் புறா |

*குறியீடுகள் :*

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | ஈ | அ | ஆ | இ |
| B) | அ | ஆ | இ | ஈ |
| C) | ஆ | இ | ஈ | அ |
| D) | இ | ஈ | அ | ஆ |

**146. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் சரியாகப் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு:**

| பட்டியல்–I | பட்டியல்–II |
|---|---|
| **1)** கவிஞர் கண்ணதாசன் | **அ)** மலைக்கள்ளன் |
| **2)** கவியரசு வைரமுத்து | **ஆ)** கவிதை மேகங்கள் |
| **3)** நாமக்கல் கவிஞர் | **இ)** இயேசு காவியம் |
| **4)** மு.பி. பாலசுப்பிரமணியன் | **ஈ)** வைகறை மேகங்கள் |

*குறியீடுகள் :*

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | இ | ஈ | அ | ஆ |
| B) | ஈ | அ | ஆ | இ |
| C) | அ | ஆ | இ | ஈ |
| D) | ஆ | இ | ஈ | அ |

**147. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் சரியாகப் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு:**

| பட்டியல்–I | பட்டியல்–II |
|---|---|
| **1)** குறிஞ்சி | **அ)** உழவன் |
| **2)** முல்லை | **ஆ)** பரதன் |
| **3)** மருதம் | **இ)** குறவன் |
| **4)** நெய்தல் | **ஈ)** ஆயன் |

*குறியீடுகள் :*

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | அ | ஆ | இ | ஈ |
| B) | இ | ஈ | அ | ஆ |
| C) | ஈ | அ | ஆ | இ |
| D) | ஆ | இ | ஈ | அ |

**148. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் சரியாகப் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு:**

| பட்டியல்–I | பட்டியல்–II |
|---|---|
| **1)** பண்புத்தொகை | **அ)** காய்கறி |
| **2)** வினைத்தொகை | **ஆ)** மலர்க்கை |
| **3)** உவமைத்தொகை | **இ)** செய்தொழில் |
| **4)** உம்மைத்தொகை | **ஈ)** வெஞ்சுடர் |

*குறியீடுகள் :*

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | இ | ஆ | அ | ஈ |
| B) | ஆ | அ | ஈ | இ |
| C) | அ | ஈ | இ | ஆ |
| D) | ஈ | இ | ஆ | அ |

**149. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் சரியாகப் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு:**

| பட்டியல்–I | பட்டியல்–II |
|---|---|
| **1)** கரி | **அ)** கயிறு |
| **2)** பரி | **ஆ)** சிங்கம் |
| **3)** அரி | **இ)** யானை |
| **4)** புரி | **ஈ)** குதிரை |

*குறியீடுகள்:*

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | ஈ | ஆ | அ | இ |
| B) | ஆ | அ | இ | ஈ |
| C) | இ | ஈ | ஆ | அ |
| D) | அ | இ | ஈ | ஆ |

**150. "தமிழோ டிசைப் பாடல் மறந்தறியேன்" – எனப்பாடியவர்**

A) பட்டிணத்தடிகள்
B) திருஞானசம்பந்தர்
C) திருநாவுக்கரசர்
D) சிவப்பிரகாச சுவாமிகள்

**151. "சமை" என்னும் வேர்ச்சொல்லை வினையெச்சமாக்கி எழுதுக.**

A) சமைத்து B) சமைத்த
C) சமை D) சமைய

**152. "ஆள்" என்னும் வேர்ச்சொல்லை வினை– யாலணையும் பெயராக்கி எழுதுக.**

A) ஆள்கிற B) ஆள்கின்ற
C) ஆள்பவர் D) ஆள்

**153. "கோ" என்னும் ஓரெழுத்து ஒரு மொழிக்குப் பொருள் தருக.**

A) போ B) கோவில்
C) கோதை D) அரசன்

**154. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க.**

A) தமிழ், இனிமை, ஊக்கம், படித்தல்
B) இனிமை, ஊக்கம், தமிழ், படித்தல்
C) இனிமை, தமிழ், படித்தல், ஊக்கம்
D) படித்தல், ஊக்கம், இனிமை, தமிழ்

**155. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க.**

A) மீனவன், மைந்தன், மன்னன், மாணவன்
B) மாணவன், மீனவன், மைந்தன், மன்னன்
C) மைந்தன், மன்னன், மாணவன், மீனவன்
D) மன்னன், மாணவன், மீனவன், மைந்தன்

**156. முறையாக அமைந்த சொற்றொடர் தேர்க.**

A) கல்வி நல்காக் கசடர்க்கு தூக்குமரம்
B) கசடர்க்கு தூக்குமரம் கல்வி நல்காக்
C) நல்காக் கசடர்க்கு தூக்குமரம் கல்வி
D) கல்வி தூக்குமரம் நல்காக் கசடர்க்கு

**157. முறையாக அமைந்த சொற்றொடர் தேர்க.**

A) மரம்போல்வர் மக்கட் பண்பில்லா தவர்
B) போல்வர் மரம் பண்பில்லாதவர் மக்கட்
C) பண்பில்லா தவர் போல்வர் மக்கட் மரம்
D) மக்கட் பண்பில்லா தவர் போல்வர் மரம்

**158. "வயல்வெளி" – பெயர்ச்சொல்லின் வகையறிக.**

A) பொருட்பெயர் B) காலப்பெயர்
C) இடப்பெயர் D) தொழிற்பெயர்

**159. "வால்" – பெயர்ச்சொல்லின் வகையறிக.**

A) காலப்பெயர் B) குணப்பெயர்
C) இடப்பெயர் D) சினைப்பெயர்

**160. "விரிமலர்" – இலக்கணக்குறிப்பு தருக.**

A) வினைத்தொகை
B) பண்புத்தொகை
C) உவமைத்தொகை
D) உம்மைத்தொகை

**161. "மா" என்னும் ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருள் தருக.**

A) மாதம் B) "மா" என்னும் ஒலி
C) மாமரம் D) மாசு

**162. "ஐ" என்னும் சொல்லின் பொருள் யாது ?**

A) வியப்பு B) ஐயர்
C) ஐந்து D) ஐயை

**163. "காயமே இது பொய்யடா – வெறும் காற்றடைத்த பையடா" – இவ்வடிகளில் விளக்கப்படும் பொருள்**

A) வெறுமை B) நிலையாமை
C) ஒவ்வாமை D) உண்மை

**164. "செப்பு மொழி பதினெட்டுடையாள் எனிற் சிந்தனை ஒன்றுடையாள்" – இப்பாடல் வரி உணர்த்தும் பொருள்**

A) ஒருமைப்பாடு
B) பதினெட்டு மொழி பேசுபவள்
C) ஒரே சிந்தனை
D) இந்தியத் தாய்

**165. "நேற்றைய வாழ்வை எண்ணிடல் எல்லாம் கனவு இன்றைய வாழ்வில் ஏதோ ஏதோ நினைவு"–இயைபுத் தொடையினை எடுத்தெழுதுக.**

A) நேற்றைய, இன்றைய
B) வாழ்வை, வாழ்வில்
C) ஏதோ, ஏதோ
D) கனவு, நினைவு

**166. கீழ்க்காணும் தொடரிலுள்ள எதுகையினைக் கண்டறிக.**

**"மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும் மிஞ்சப் புகட்ட மிகவளர்ந்தாய்."**

A) புகட்ட, குளிப்பாட்டி
B) மஞ்சள், முப்பால்
C) மிஞ்ச, மிக
D) மஞ்சள், மிஞ்ச

**167. “கற்றவர் விழுங்கும் கற்பகக் கனி” – இதில் அமைந்துள்ள எதுகைத் தொடை**

A) கற்றவர், கற்பக
B) விழுங்கும் கனி
C) கற்பகக் கனி
D) கற்றவர் விழுங்கும்

**168. “தெருவுக்கும் ஊருக்கும்**
**தீந்தமிழில் பெயர் மாற்றம்**
**உருவாக வேண்டும்” – எதுகைச் சொல் கூறுக.**

A) மாற்றம் உருவாக
B) தெருவுக்கும் உருவாக
C) தீந்தமிழில் மாற்றம்
D) உருவாக வேண்டும்

**169. “பொய்யாக் குலக்கொடி” – என்று இளங்கோவடிகள் இயம்பிய நதியின் பெயர் எது?**

A) காவிரி  B) தாமிரபரணி
C) வைகை  D) பாலாறு

**170. “உலகில் ஒவ்வொருவருக்கும் மிகச் சிறந்த மொழி” – எது?**

A) ஆங்கிலம்  B) தாய்மொழி
C) தமிழ்  D) சீனம்

**171. “பள்ளி கூடியது” – ஆகுபெயரின் வகையறிக.**

A) சினையாகு பெயர்
B) பண்பாகு பெயர்
C) தொழிலாகு பெயர்
D) இடவாகு பெயர்

**172. “கரும்பு நட்டான்” – ஆகுபெயரின் வகையறிக.**

A) சினையாகு பெயர்
B) பண்பாகு பெயர்
C) இடவாகு பெயர்
D) காலவாகு பெயர்

**173. “வாடிய முகம்” – இலக்கணக்குறிப்பு யாது?**

A) முற்றெச்சம்  B) பெயரெச்சம்
C) வினையெச்சம்  D) எச்சம்

**174. “ஓடி வென்றான்” – இலக்கணக்குறிப்பு தருக.**

A) பெயரெச்சம்  B) முற்றெச்சம்
C) எச்சம்  D) வினையெச்சம்

**175. வந்தனர், வென்றனர் – எவ்வகை எச்சம்?**

A) முற்றெச்சம்  B) எச்சம்
C) பெயரெச்சம்  D) வினையெச்சம்

**176. “கண்ணா, வா!” – எவ்வகைத் தொடர்?**

A) எழுவாய்த் தொடர்
B) விளித்தொடர்
C) வினையெச்சத் தொடர்
D) பெயரெச்சத் தொடர்

**177. உழைத்து, உயர்ந்திடு – எவ்வகை வாக்கியம்?**

A) உணர்ச்சி வாக்கியம்
B) செய்தி வாக்கியம்
C) கட்டளை வாக்கியம்
D) தன்வினை வாக்கியம்

**178. “பல்லாண்டு நம்நாடு அடிமைப்பட்டு கிடந்ததே” – எவ்வகை வாக்கியம்?**

A) செய்தி வாக்கியம்
B) உணர்ச்சி வாக்கியம்
C) தனி வாக்கியம்
D) வினா வாக்கியம்

**179. “இசையின் இனிமையை அறியாதவர் இலர்” – எவ்வகை வாக்கியம்?**

A) தன்வினை வாக்கியம்
B) பிறவினை வாக்கியம்
C) உடன்பாட்டு வாக்கியம்
D) பொருள்மாறா எதிர்மறை வாக்கியம்

**180. ஆசிரியர் திருக்குறள் எழுதுவித்தார் – எவ்வகை வினை?**

A) தன்வினை  B) பிறவினை
C) செய்வினை  D) செயப்பாட்டு வினை

**181. “கரென்ட்” – தமிழ்ச்சொல் தருக.**

A) பேட்டரி  B) மின்சாரம்
C) மின்விசை  D) மின்பொறி

**182. “உண்” – வேர்ச்சொல்லை வினைமுற்றாக்குக.**

A) உண்ட  B) உண்ணும்
C) உண்டான்  D) உண்டவன்

**183. “காண்” – வேர்ச்சொல்லை வினையெச்சமாக்குக.**

A) காண்கிறான்  B) கண்டு களித்தான்
C) கண்டான்  D) கண்டவன்

**184. “கேள்” – வேர்ச்சொல்லை பெயரெச்சமாக்குக.**

A) கேட்ட பாடல்
B) கேள்வி
C) கேள் சொல்கிறேன்
D) கேட்டவன்

**185. “ஆடு” – தொழிற்பெயரைக் கூறுக.**

A) ஆடியவன் B) ஆடு
C) ஆடுதல் D) ஆட்டிய

**186. சொல்லி முடித்தான் – இதில் “சொல்லி” என்பதற்கு வேர்ச்சொல் தருக.**

A) சொல்லிய B) சொல்லியவன்
C) சொல் D) சொன்ன

**187. பார்த்த கண்கள் – இதில் “பார்த்த” என்பதற்கு வேர்ச்சொல் தருக.**

A) பார்த்த B) பார்த்து
C) பார் D) பார்வை

**188. “வந்தவன்” – இச்சொல்லின் வேர்ச்சொல் தருக.**

A) வரு B) வந்த
C) வருக D) வா

**189. “உடுத்த” என்னும் பெயரெச்சத்தை, வினையெச்சமாக்குக.**

A) உடு B) உடுத்தி
C) உடுப்பு D) உரு

**190. “வெல்” – இச்சொல்லை வினையாலணையும் பெயராக்குக.**

A) வென்றவன் B) வென்ற
C) வெல்லு D) வெல்லுதல்

**191. சரியான சொல்லைத் தேர்ந்தெடுக்க.**

A) குதிரை கத்தும்
B) குதிரை கதறும்
C) குதிரை கனைக்கும்
D) குதிரை முழக்கமிடும்

**192. சரியான சொல்லைத் தேர்ந்தெடுக்க.**

A) யானைக் குழந்தை
B) யானைக் குட்டி
C) யானைக் குருளை
D) யானைக் கன்று

**193. சரியான சொல்லைத் தேர்ந்தெடுக்க.**

A) முருங்கை ஓலை
B) முருங்கைத் தழை
C) முருங்கைக் கீரை
D) முருங்கை இலை

**194. சரியான சொல்லைத் தேர்ந்தெடுக்க.**

A) புலிக்குருளை B) புலிப்பரள்
C) புலிக்குட்டி D) புலிக்கன்று

**195. சரியான சொல்லைத் தேர்ந்தெடுக்க.**

A) குதிரைக்கூடம்
B) குதிரைத்தொழுவம்
C) குதிரைக்கொட்டில்
D) குதிரைப்பட்டி

**196. சரியான சொல்லைத் தேர்ந்தெடுக்க.**

A) யானைத் தொகுப்பு
B) யானைக் கூட்டம்
C) யானை மந்தை
D) யானை நிரை

**197. சரியான சொல்லைத் தேர்ந்தெடுக்க.**

A) கம்பந்தோட்டம்
B) கம்பஞ்சோலை
C) கம்பங்கொல்லை
D) கம்பந்தோப்பு

**198. பொருந்தாச் சொல்லைத் தேர்ந்தெடுக்க.**

A) குட்டி B) கன்று
C) குஞ்சு D) குழந்தை

**199. பொருந்தாச் சொல்லைத் தேர்ந்தெடுக்க.**

A) தமிழ் B) மலையாளம்
C) தெலுங்கு D) இந்தி

**200. பொருந்தாச் சொல்லைத் தேர்ந்தெடுக்க.**

A) பாரதியார் B) பாரதிதாசனார்
C) தாகூர் D) சுரதா

# விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. **(B)** | 2. **(C)** | 3. **(A)** | 4. **(B)** | 5. **(C)** | 6. **(B)** | 7. **(A)** | 8. **(D)** | 9. **(A)** | 10. **(D)** |
| 11. **(A)** | 12. **(A)** | 13. **(C)** | 14. **(B)** | 15. **(B)** | 16. **(A)** | 17. **(B)** | 18. **(A)** | 19. **(C)** | 20. **(D)** |
| 21. **(D)** | 22. **(B)** | 23. **(C)** | 24. **(B)** | 25. **(D)** | 26. **(A)** | 27. **(C)** | 28. **(B)** | 29. **(A)** | 30. **(B)** |
| 31. **(B)** | 32. **(C)** | 33. **(A)** | 34. **(D)** | 35. **(B)** | 36. **(B)** | 37. **(D)** | 38. **(D)** | 39. **(C)** | 40. **(B)** |
| 41. **(A)** | 42. **(B)** | 43. **(A)** | 44. **(B)** | 45. **(A)** | 46. **(B)** | 47. **(B)** | 48. **(D)** | 49. **(B)** | 50. **(B)** |
| 51. **(C)** | 52. **(D)** | 53. **(A)** | 54. **(B)** | 55. **(C)** | 56. **(B)** | 57. **(D)** | 58. **(B)** | 59. **(B)** | 60. **(A)** |
| 61. **(B)** | 62. **(C)** | 63. **(D)** | 64. **(A)** | 65. **(D)** | 66. **(D)** | 67. **(A)** | 68. **(C)** | 69. **(D)** | 70. **(A)** |
| 71. **(A)** | 72. **(A)** | 73. **(B)** | 74. **(C)** | 75. **(A)** | 76. **(C)** | 77. **(D)** | 78. **(D)** | 79. **(B)** | 80. **(A)** |
| 81. **(D)** | 82. **(D)** | 83. **(D)** | 84. **(D)** | 85. **(C)** | 86. **(C)** | 87. **(A)** | 88. **(A)** | 89. **(C)** | 90. **(C)** |
| 91. **(C)** | 92. **(C)** | 93. **(D)** | 94. **(D)** | 95. **(D)** | 96. **(A)** | 97. **(C)** | 98. **(C)** | 99. **(B)** | 100. **(A)** |
| 101. **(C)** | 102. **(B)** | 103. **(A)** | 104. **(A)** | 105. **(B)** | 106. **(C)** | 107. **(D)** | 108. **(A)** | 109. **(D)** | 110. **(C)** |
| 111. **(C)** | 112. **(A)** | 113. **(D)** | 114. **(C)** | 115. **(B)** | 116. **(C)** | 117. **(B)** | 118. **(D)** | 119. **(C)** | 120. **(A)** |
| 121. **(C)** | 122. **(C)** | 123. **(D)** | 124. **(B)** | 125. **(C)** | 126. **(A)** | 127. **(B)** | 128. **(D)** | 129. **(B)** | 130. **(C)** |
| 131. **(B)** | 132. **(B)** | 133. **(A)** | 134. **(A)** | 135. **(C)** | 136. **(C)** | 137. **(C)** | 138. **(A)** | 139. **(C)** | 140. **(A)** |
| 141. **(B)** | 142. **(D)** | 143. **(D)** | 144. **(C)** | 145. **(D)** | 146. **(A)** | 147. **(B)** | 148. **(D)** | 149. **(C)** | 150. **(C)** |
| 151. **(A)** | 152. **(C)** | 153. **(D)** | 154. **(B)** | 155. **(D)** | 156. **(A)** | 157. **(A)** | 158. **(C)** | 159. **(D)** | 160. **(A)** |
| 161. **(C)** | 162. **(A)** | 163. **(B)** | 164. **(A)** | 165. **(D)** | 166. **(D)** | 167. **(A)** | 168. **(B)** | 169. **(C)** | 170. **(B)** |
| 171. **(D)** | 172. **(A)** | 173. **(B)** | 174. **(D)** | 175. **(A)** | 176. **(B)** | 177. **(C)** | 178. **(B)** | 179. **(D)** | 180. **(B)** |
| 181. **(B)** | 182. **(C)** | 183. **(B)** | 184. **(A)** | 185. **(C)** | 186. **(C)** | 187. **(C)** | 188. **(D)** | 189. **(B)** | 190. **(A)** |
| 191. **(C)** | 192. **(D)** | 193. **(C)** | 194. **(B)** | 195. **(C)** | 196. **(B)** | 197. **(C)** | 198. **(C)** | 199. **(D)** | 200. **(C)** |